ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1654/21 - 2010 මැයි 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.05.20

*1654/21 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### ***காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தை நிறுவுதல்***

*காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிய காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் பிரிவின் தொழிற்பாடுகளை கீழ்க் காணுமாறு தொடர்ந்தும் விஸ்தரித்து, மிகவும் சிறந்த விளைத்திறன்மிக்க சேவையை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன், காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2009.06.24 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2009.11.26 ஆம் திகதிய அப/09/1222/339/019 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு, போர்வீரர் நலனோம்புகை அமைச்சின் கீழ், காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருமாறு நிறுவப்பட்டதென்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.*

*2009.12.31 ஆம் திகதி வரை காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் ஒரு பிரிவாக, காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கீழ் வரும் விடயங்களுடன் தொடர்புடையதான கடமைகள்:-*

1. *இலங்கைக்காக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டப் பின்னணியை வகுத்தல்.*

2. *இலங்கைக்காக தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டமொன்றை வகுத்தல்.*

3. *மட்டுப்படுத்தப்பட்ட வளமான நிலத்தை, மானிட நலன் கருதியும், சுற்றாடல் சமநிலையைப் பேணும் வகையிலும் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு, பொருத்தமான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குதல்.*

4. *நிலத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் போது, இந்த வளத்தின் பாதுகாப்பும், நிலைத்திருக்கும் தன்மையும் உறுதிப்படுத்தப்படுமாறு செயற்படுவதற்கு, உரிய சிபாரிசுகளையும், பணிப்புரைகளையும் வழங்குதல்.*

5. *விஞ்ஞான ரீதியான நிலப் பயன்பாட்டு திட்டமிடல் தொடர்பில், அறிவு, பயிற்சி, ஆய்வு என்பன விஸ்தரிக்கப்படுமாறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தல்.*

மற்றும் மேற்சொன்ன விடயங்களுக்குத் துணையாக அமையும் மற்றும் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும், 2010, சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஊடாக மேற்கொள்ளப்படும்:-

முகவரி :

பணிப்பாளர்,
காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
இல. 31, பதிபா வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

| | | |
|---|---|---|
| தொலைபேசி இல. பணிப்பாளர் | - | 011 - 2587236 |
| பொது | - | 011 - 2500338 |

ரீ. அசோக்க பீரிஸ்,
செயலாளர்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு.
'கொவிஜன மந்திரய',
இல. 80/5, இரஜமல்வத்தை ஒழுங்கை,
பத்தரமுல்லை.
2010, மே 13.

6-96